இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம், மைசூர்

தமிழ்த்துறை

நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி

(தன்னாட்சி, தேசிய மீள்தர மதிப்பீடு & மதிப்பேற்றுக்குழுவின் தகுதி, ஐ.எஸ்.ஓ. 9001:2015 தரச் சான்றிதழ் பெற்றது)

இணைந்து நடத்திய தேசியக் கருத்தரங்கம்

# இளங்கலை மாணவர்களுக்குத் தமிழ் இலக்கணம் கற்பித்தலில் ஏற்படும் சிக்கல்களும் தீர்வுகளும்


(03.02.2021 – 04.02.2021)

# சான்றிதழ்

நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரித் தமிழ்த்துறை (சுயநிதி) மற்றும் இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம், மைசூர் இணைந்து நடத்திய **இளங்கலை மாணவர்களுக்குத் தமிழ் இலக்கணம் கற்பித்தலில் ஏற்படும் சிக்கல்களும் தீர்வுகளும்** என்னும் பொருண்மையிலான தேசியக் கருத்தரங்கில் முனைவர்/பேரா/செல்வன்/செல்வி ந. ஜெயசுதா, தமிழ்த்துறை, ந.க.ம. கல்லூரி, பொள்ளாச்சி .................. அவர்கள் தமிழ் இலக்கணம் கற்றலில் ஏற்படும் சிக்கல்களும் தீர்வுகளும் என்னும் தலைப்பில் கட்டுரையாளராக/பங்கேற்பாளராக/அமர்வுத் தலைவராகக் கலந்து கொண்டார் எனச் சான்றளிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| முனைவர் த. கீதாஞ்சலி | முனைவர் த. பரமேசுவரி | முனைவர் பொ.மா. பழனிசாமி | முனைவர் பி. பெருமாள்சாமி |
| கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் | தமிழ்த்துறைத் தலைவர் (சுயநிதி) | முதல்வர் | துணை இயக்குநர், இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம், மைசூர் |

# இளங்கலை மாணவர்களுக்குத் தமிழ் இலக்கணம் கற்பித்தலில் ஏற்படும் சிக்கல்களும் தீர்வுகளும்




பதிப்பாசிரியர்: முனைவர் த.கீதாஞ்சலி

31. எண்வகை மெய்ப்பாடுகள் 218
அ. மகபுபூ

32. தமிழ் இலக்கண கருத்தொற்றுமைகளும் கற்பித்தலும் 228
முனைவர் பா. அருள்ஜோதி

33. தமிழ் இலக்கணம் கற்றலில் ஏற்படும் 241
சிக்கல்களும் தீர்வுகளும்
முனைவர் ந. ஜெயசுதா

34. மயங்கொலிச் சொற்களில் ஏற்படும் 250
சிக்கல்களும் தீர்வுகளும்
முனைவர் இரா. விஷ்ணுப்பிரியா

35. தமிழலக்கண வரலாற்றில் வினா வெழுத்துக்கள் 257
முனைவர் ந. பிரகாஷ்

36. வினைத்தொகை கற்றல் கற்பித்தலில் 263
சிக்கல்களும் தீர்வுகளும்
முனைவர் த. பரமேசுவரி

37. தமிழ் இலக்கணம் கற்பித்தலில் ஏற்படும் 275
சிக்கல்களும் தீர்வுகளும்
வெ. பாரதி

# 33. தமிழ் இலக்கணம் கற்றலில் ஏற்படும் சிக்கல்களும் தீர்வுகளும்

முனைவர் ந. ஜெயசுதா
தமிழ் உதவிப்பேராசிரியர்,
என்.ஜி.எம் கல்லூரி,
பொள்ளாச்சி.

ஒரு மொழியைப் பிழையில்லாமல் பேசவும் எழுதவும் துணை புரிவது இலக்கணம் ஆகும். இலக்கணம் கடினம் அல்ல. என்று மலேசியா பல்கலை பேராசிரியர், “இன்றைய மாணவர்களுக்கு எளிமையாக்கி கற்பிப்பது ஆசிரியர்களின் கடமை. தொல்காப்பியம், நன்னூல் போன்றவை கடினமான நூல்கள் என்று ஒதுக்கிவிடாமல் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி புதிய உத்திகளுடன் உலக அளவில் எடுத்துச்செல்ல வேண்டும் என்கின்ற நோக்கம் வரவேற்கத்தக்கது எனலாம்.

தமிழ் என்றாலே ஓட்டம் பிடிக்கின்றனர் ஏன்? பொதுவாகவே தமிழ் எழுத்துக்கள் 247 யும் நினைவில் கொள்ள வேண்டுமே என்கிற எண்ணம் பலர் மனதில் உண்டு. ஆங்கிலமா 26 தான் என்கிற எண்ணத்தில் தமிழைப் புறக்கணிப்போர் மத்தியில், இலக்கணத்திற்கு இடமே இல்லை. இலக்கணம் என்றாலே முகம் சுலிப்பதோடு பயமும் கொள்கின்றனர். நூற்பாக்களையும் விதிகளையும் கண்டு அஞ்சுகின்றார்கள். இத்தகைய சூழலில் தமிழை, தமிழ் மொழியை, இலக்கணத்தை எவ்வாறு நிலைநிறுத்துவது என்ற கேள்வி இலக்கிய உலகில் பலரிடமும் உண்டு. இதை முன்னெடுத்துச் சென்றும் இதற்கான தீர்வை கண்டுணரவும் இதுபோன்ற கருத்தரங்குகள் பேருதவி புரியலாம்..

**இலக்கணம்**

இலக்கணம் என்பது பழந்தமிழ்ச் சொல். இலக்கணம் என்பதை பாவாணர், “இலக்கு - இலக்கணம் - சிறந்த நடைக்கு

எடுத்துக்காட்டாக அல்லது கற்றோர் பின்பற்றும் இலக்காக கூறப்பெறும் மொழியமைதி(grammer)" என்கிறார். நூல் என்பது பழமையான நாளில் இலக்கணத்தையே குறித்துள்ளது.

## புத்திலக்கணம் உருவாகாமை

பண்டைய காலகட்டங்களில் உருவாக்கிய இலக்கணங்கள், இலக்கியங்களைக் கண்டே இலக்கணங்களைப் படைத்துள்ளனர் என்பதை,

"இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பல்" என்னும் வரிகள் இலக்கியத்திற்குப் பின் இலக்கணம் உருவாகியுள்ளதை விளக்குகிறது.

மேலும்,

"இலக்கியம் இன்றி இலக்கணம் இன்றே
எள்ளின் றாகில் எண்ணெயும் இன்றே
எள்ளினின் றெண்ணெய் எடுப்பது போல
இலக்கியத்தினின்றும்எடுபடும்இலக்கணம்"

(பக்.46 இலக்கண வரலாறு, இரா.இளங்குமரன்)

என்ற பாடல் வரிகள் எண்ணெய் என்னும் பெயர் எள் நெய் என்பதன் வழி வந்தவை தான். இது போல இலக்கியத்தில் இருந்து இலக்கணம் பிறந்தவை என்கிறது.

மேலும் இலக்கணம் வளர்ச்சியடையாமைக்கு இளங்குமரன், "இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பியது ஒரு நிலை. இலக்கணம் கண்டு இலக்கியம் படைத்தல் ஒரு நிலை. இவற்றுள் இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்புதலே இயற்கை முறை. வளர்ச்சி முறை. ஆனால் இடைக்கால பிற்காலங்களில் இலக்கணங்கண்டு அதற்கு ஏற்ப இலக்கியம் படைக்கும் முறையை மேற்கொண்டமையால் ஒரே பொறிவினைப் படைப்புப் போல இலக்கியங்கள் அமைந்தன. புத்திலக்கண நெறிகளும் வளராமல் பெரிதும் கூறியது கூறலாகவே அமைந்தன.

பழையன கழிதலும் புதுவன புகுதலும்
வழுவல கால வகையினாலே

என்றிருந்தும்

கடிசொல் இல்லை காலத்துப் படினே

என்றிருந்தும்

வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்... நாடி என்றிருந்தும் இலக்கியப் படைப்பாளிகள் அவற்றைப் போற்றிக் கொள்ளாமையால், இலக்கணம் தன் வளர்நிலை காட்டலில் தேக்கமுற்றது." (இலக்கண வரலாறு)

என்று கூறுவதிலிருந்து புது இலக்கணங்கள் உருவாக்கவும் இல்லை, அத்தகைய சூழலை ஏற்படுத்தாது இலக்கியம் படைப்பதிலேயே ஆர்வம் காட்டியுள்ளனர் போலும். ஆகையால் புத்திலக்கியம் படைப்பவர்கள் கடினமான இலக்கணங்களை விட்டொழிந்தனர் புதிய இலக்கண முறைகளும் உருவாகவில்லை எனலாம்.

## கற்பனைளுக்கு இடமில்லாமை

இலக்கியங்களில் உள்ள எண்சுவைகளின் ரசங்கள் இலக்கணங்களில் இருக்காது. உணர்வுகளுக்கும் உணர்ச்சிகளுக்கும் இடமில்லா தன்மையுடையது. சூத்திர விதிகளை கணிதப் பாடங்கள் போல படிக்கும் காரணத்தாலும் இலக்கணத்தை வெறுக்கும் நிலைக்குத் தள்ளப்படுகிறான் எனலாம்.

ஆக மாணவர்கள் அஞ்சாது, எளிமையாக படிக்கும் வகையில் இலக்கணத்தை எளியவடிவில் கொண்டுவரலாம். உதாரணமாக கலைஞர் எழுதிய தொலகாப்பியப்பூங்கா போன்று...

தமிழில் கிடைத்துள்ள அரிய பொக்கிசம், தொன்மையானதுமான தொல்காப்பியத்தை, "மரம் அடர்ந்த காடு" என்று உள்நுளையாது அஞ்சி நின்ற நிலையில் இது காடன்று கவின் மலர்கள் மலர்ந்து கமழும் பூங்கா என்று வரலாற்றுச் சான்றுகள் காட்டி அரிய உரை தந்துள்ளார் கலைஞர்.

தொல்காப்பியப் பூங்கா குறித்து, "மக்கள் படிக்க விரும்பும் எளிய நடையில், படிப்பவர் ஆர்வத்தை வளர்க்கும் சுவையான கதைக் குறிப்புகளுடன், நினைவில் நிறுத்தத் துணையாகும் வரலாற்று விளக்கச் செய்திகளுடனும் இந்தப் பூங்காவை இயற்றியுள்ளார்" என்று க. அன்பழகன் கூற்றும் ஒப்பு நோக்கத்தக்கது.

## மெய்யெழுத்துக்கள் நினைவு வைத்தல்

மெய்யெழுத்துக்கள் பதினெட்டு என்பதை நினைவில் வைத்துக்கொள்ள கலைஞர், சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குச் சிலை எடுத்திடக் கல் கொண்டு வர குயிலாலுவம் என்ற இடத்தில் கனகவியாசர் என்ற மன்னருடன் போரிட்டு வென்றான். அவர்கள் தலையில் கல்லேற்றச் செய்தான். அப்போது அவன் முழக்கமிட்டான்,

"தேவாசுரப்போர் பதினெட்டு ஆண்டுகள் நடந்தது, பாரதப்போர் பதினெட்டு நாட்கள் நடந்தது. இமயம் வந்து இந்த செங்குட்டுவன் நடத்திய போர் பதினெட்டு நாழிகையில் முடிந்து விட்டது என்று வரலாற்றுச் செய்தியோடு மெய்யெழுத்தை நினைவில் வைத்துக் கொள்ளுமாறு உரை வழங்கியமை இன்றையோர்க்கு எளிமையாக புரியும் விதத்தில் பயனுடையதாக அமைகின்றது. இவ்வகையிலேயே எளியையாகப் புரியும் விதத்தில் இலக்கணத்தை அமைக்கலாம்.

## ஆசானின் புலமை

ஆசிரியர் என்றும் கற்றுக்கொண்டிருந்தால் தான் மாணவர்களுக்குக் கற்பிக்க முடியும்.

இலக்கணமும் அவ்வாறே பிழையின்றி முழுமையாகப் படித்திருந்தால் மட்டுமே இலக்கணப் புலமையைப் பெற முடியும். இதற்கு,

"நூல் பயில் இயல்பே நுவலின் வழக்கறிதல்
பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல்"

என்ற வரிகள், மாணவன் ஒருவன் ஆசிரியரிடம் பலமுறை பாடம் கேட்பதால் ஒரு கால் பங்கும், ஒத்த மாணவர்களோடு சேர்ந்து பயில்வதால் ஒரு கால் பங்கும், தான் ஆசிரியராய் அமர்ந்து மாணவர் பலருக்குப் பல முறை பாடம் கற்பிப்பதால் ஓர் அரைப்பங்குமாக முழுப்புலமையும் பெற்றுவிடுவான் என்கிறது.

## பாடநூல்களும் இலக்கணச்சான்றுகளும்

தமிழ் பாடங்கள் கீழ் வகுப்பிலிருந்து மேல் வகுப்பிற்கு வரும் பொழுது உரை, செய்யுள், இலக்கணம் என்று தனித்தனியாக வகைப்படுத்தி பாடத்திட்டத்தை உருவாக்கி யுள்ளனர். ஏழாம், எட்டாம் வகுப்பிற்கு மேல் பாடப்பகுதியில் உள்ள செய்யுள் பகுதிகளை வைத்தே இலக்கணத்திற்குச் சான்றுகள் தந்தால் மேல் நிலை படிக்கும் மாணவன் இலக்கணத்தை விருப்பத்துடன் படிக்கும் நிலை ஏற்படும்.

மாணாக்கர்களில் மூன்று வகை மாணக்கர் உண்டு அவை, தலை மாணாக்கர் இடை மாணாக்கர், கடை மாணாக்கர் என நன்னூல் பிரித்துக் காட்டுகிறது.

“அன்னம் ஆவே மண்ணொடு கிளியே
இல்லிக்குடம் ஆடு எருமை நெய்யரி
ஆன்னர் தலையிடை கடை மாணாக்கா”(நன்னூல் 38)

## தலை மாணாக்கர்

அன்னப் பறவையையும் பசுவையும் போன்றவர்கள் தலை மாணாக்கர். பாலையும் நீரையும் கலந்து வைத்தால் நீரைப் பிரித்து பாலை மட்டும் பருகும் இயல்புடையது அன்னம். அதுபோல ஆசிரியர் கூறுபவற்றுள் நல்லதை எடுத்துக் கொண்டு அல்லதைத் தள்ளி விடும் மாணவர்கள் தலை மாணாக்கர் எனப்படுவர்.

மேலும், தனக்கு உணவு கிடைக்கும் போது வயிரார மேய்ந்துவிட்டு பின்னர் ஓரிடத்தில் படுத்துச் சிறிது சிறிதாக அசைபோடுவது பசுவின் இயல்பு ஆகும். அதுபோலப் பாடம்

சொல்லப்படும் போது கிடைக்கும் எல்லாச் செய்திகளையும் செவியில் வாங்கிக்கொண்டு பின்னர் சிந்தனைக்குக் கொண்டு வந்து நினைத்துப் பார்ப்பது தலை மாணாக்கர்.

**இடை மாணாக்கர்**

நிலத்தையும் கிளியையும் போன்றவர்கள். உழவர் மேற்கொள்ளும் முயற்சியின் அளவுக்கு ஏற்பப் பலன் கொடுப்பது நிலத்தின் இயல்பாகும். அது போல தன்முயற்சி ஏதுமின்றி ஆசிரியர் கூறவதை மட்டும் கேட்டுப் பயிலும் மாணாக்கர் இடை மாணாக்கர்.

தன்னை வளர்ப்பவர் சொல்லித்தரும் சொற்களை மட்டும் சொல்லும் இயல்புடையது கிளி. அதைப் போன்று தானாக முயன்று புதியனவற்றைக் கற்றுக் கொள்ளாமல் இருப்பது இடைமாணாக்கர்.

**கடை மாணாக்கர்**

பொத்தற்குடம், ஆடு, எருமை, பனைமட்டை போன்றவர்கள் கடை மாணாக்கர். ஓட்டைக்குடத்தில் நீரை நிரப்பினால் அது ஓட்டை வழியே நீரை ஒழுகவிட்டு வெறுங்குடமாகி விடும். அதுபோல ஆசிரியர் கற்பித்தவற்றைக் கேட்டவுடன் மறந்துவிடும் வகை மாணவர்கள் கடை.

கிடைக்கும் உணவை ஓரிடத்தில் மேயாமல் பார்க்கும் இடங்களிலெல்லாம் நுனிப்புல் மேய்ந்து வயிறு நிரம்பாமல் அலையும் இயல்புடையது ஆடு. அவ்வாடு போலத்தான் மேலோட்டமாகக் கல்வி கற்பவன் கடை மாணாக்கன். குளத்து நீரைக் கலக்கிச் சேறும் சகதியுமாய் பருகும் இயல்புடையது எருமை. பனைமட்டையைத் தாங்கியிருக்கும் பன்னாடையில் கள்ளை வடிகட்டும் போது அது மதுவை விடுத்து தேவையில்லாததை பிடித்திருப்பது போல, மாணாக்கன் தேவையானதை விட்டு தேவையில்லாததைப் பிடித்துக் கொள்பவன் இம்மாணாக்கன்.

இவ்வாறு மூன்று மாணாக்கர்களுக்குத் தக்க வகுப்பு எடுக்க வேண்டிய சூழல் ஆசானுக்கு உருவாகின்றது. ஒரு சான்று தரும் இடத்தில் பல சான்றுகள் தரவேண்டும். புரியும் விதத்தில் எளிமைப்படுத்தி வகுப்புகளை எடுக்க வேண்டும்.

வல்லினம் மிகும் இடங்களில்,

“நிலவைப் பார்த்தான்

பொருளைச் சேர்த்தான்”

என்று இயற்கையோடு பொருள் பொதிந்து அமையுமாறு சான்றுகள் தரலாம்.

படங்கள் அமைத்து காட்சிப்படுத்தி மனதில் பதியவைக்கலாம். இசையோடும் பதியவைக்கலாம்

தமிழ் இலக்கணத்தை வெள்ளிசை (Karoeke) முறையில் கற்பித்தல் பற்றி புவனேசுவரி கணேசன் அவர்கள், மகிழ்ச்சியாகவும் நினைவாற்றல் மேம்படுத்தவும் கற்பனை வளத்தை ஏற்படுத்தவும் பேருதவி புரிகின்றது என்கிறார்.

## வெள்ளிசை(Karoeke) அணுகுமுறை- விளக்கம்:

வெள்ளிசை எனப்படுவது சப்பான் நாட்டினர் அறிமுகப்படுத்திய ஒரு வகை மனமகிழ் நடவடிக்கையாகும். இதன் முறைப்படி பாடலின் மெட்டினை மட்டும் எடுத்துக் கொண்டு அதன் வரிகள் எழுத்து வடிவமாக படவில்லையில் (Slide) திரையிட்டு ஒருங்கிணைக்கப்படும். இதன் பொருட்டு வாசகர்கள் இசையினைச் செவிமடுத்த வண்ணம் படவில்லையில் திரையிடப்படும் பாடல் வரிகளைப் பார்த்துப் பாடுவார்கள் என்று கூறி சான்றுகளும் தந்துள்ளார்.

ம்ம்ம்ம். ஒருமை பன்மை அறிவோம்

ம்ம்ம்ம். ஒருமை பன்மை அறிவோம்

ஒருமை என்றால் ஒன்று

பன்மை என்றால் நிறைய

இதுவே விதியாகும். எல்லோரும் கற்க வாருங்கள்.

தனனான னான தனானனா
தனனான னான தனானனா

கோழி, மீன்,குடை,சட்டை என்பது
ஒருமை என்று நாமும் அறிந்து கொள்ளுவோம்
கோழிகள், மீன்கள், குடைகள், சட்டைகள்
பன்மை என்று நாமும் தெரிந்து கொள்ளுவோம்

ஒருமை என்றால் சொல்லைமட்டும் எழுதுவோம்
பன்மை என்றால் கள் சேர்த்து கொள்ளுவோம்
தனனான னான தனானனா
தனனான னான தனானனா

மேற்கண்ட இலக்கணம் தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு உள்ளது இதை பாடலாகப் பாடும் பொழுது மறவாது மனதில் பதிகின்றது.

ம்ம்ம் சொந்த குரலில் பாட... என்று பாடப்படும் திரைப்படப் பாடலின் மெட்டைக் கொண்டு பாடப்பட்டடுள்ளது

இவ்வாறு கடினமில்லாது எளிமையாகப் படிக்க இவ்வாறான முறைகளையெல்லாம் பயன்படுத்தும் பொழுது மாணவன் இலக்கணத்தை விரும்பிப் படிக்க முன்வருவான்.

தமிழ் முத்தமிழில் ஒன்றான இசையை விரும்பாதவர் எவரும் இவ்வுலகில் இல்லை.. ஆக நம் முன்னோர்கள் இசையோடு சேர்த்து தான் தமிழை வளர்த்தார்கள், அதைப் பின்பற்றியே நாமும் இசையோடு இலக்கணத்தைக் கற்பிக்க முன்வரலாம்.

சல சல என இரட்டைக்கிளவி

தக தக என இரட்டைக்கிளவி தமிழில் உண்டல்லோ!

தமிழில் உண்டல்லோ!

என்ற திரைப்பாடலையும் சான்றாகக் கொள்ளலாம்.

இலக்கணத்தை கற்பனை, கதைகளுக்கு இடம் தந்து இசையோடு கற்பிக்க முன்வரலாம்.